


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கு, 2025 ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினையும், விருதுத் தொகையாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச் சிலையும் வழங்கினார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2025) சென்னை. கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட இராசேந்திரன் சங்கரவேலாயுதன் அவர்கள் எழுதிய “தமிழ் வினையடிகள் வரலாற்று மொழியியல் ஆய்வு” மற்றும் பா.ரா. சுப்பிரமணியன் எழுதிய “சங்க இலக்கியச் சொல்வளம்” ஆகிய நூல்களை வெளியிட்டார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் ம. சக்கரவர்த்தி, இரா. மோகனசுந்தரம், திருமதி பானுமதி (எ) ஆதிரா முல்லை, அ. இதயகீதம் இராமானுஜம், திருமதி ந. சுந்தரி ஆகிய 5 பேருக்கு உயர்த்தப்பட்ட உதவித் தொகைக்கான ஆணைகளை வழங்கினார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் ம. சக்கரவர்த்தி, இரா. மோகனசுந்தரம், திருமதி பானுமதி (எ) ஆதிரா முல்லை, அ. இதயகீதம் இராமானுஜம், திருமதி ந. கந்தரி ஆகிய 5 பேருக்கு உயர்த்தப்பட்ட உதவித் தொகைக்கான ஆணைகளை வழங்கினார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், செம்மொழிநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான நேற்று, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி வணங்கினார். இந்நிகழ்வையொட்டி, “செம்மொழி நாள்காணும் எம்மொழித் தலைவனுக்குத் தமிழ் வணக்கம் தெரிவித்தேன்” என, கவிப்பேரரசு வலைதளப் பதிவிட்டுள்ளார்.

# ஆரிய சூழ்ச்சிகளை முறியடித்து நம்மைக் காக்கிறார் முதலமைச்சர்!

## சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் மாணவர் வாசகர் சந்திப்பு!

சென்னை, ஜூன்.4-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகம்’ அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 100 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கோடை விடுமுறையைப் பயனுள்ளதாக்கும் வகையில் கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 03.06.2025 அன்று 114 (அ) வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் பா.ஸ்ரீலேகா கலந்து கொண்டு பேசும்போது,



“தன் அப்பத்தாவிடமும், அம்மாவிடம் இருந்த கரண்டி இன்று தன்னிடம் இல்லாமல் படித்து பட்டதாரியாக இருக்கிறேன் என்றால் அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர்தான் காரணம். அவருடைய 102வது பிறந்தாநாளில் கலைஞர் நூலகத்தில், அதுவும் கழக இளம் பேச்சாளராக பேசுகிறேன் என்பது எனக்கு கூடுதல் மகிழ்ச்சி. நம் முன்னோர்கள் கல்வி கற்க வந்தபோது, குலக்கல்வி என்ற பெயரில் அதை சிதைக்க நினைத்தார் ராஜாஜி. அதை நம் திராவிட இயக்கத் தலைவர்கள் அன்று முறியடித்தார்கள். இன்று நாம் படிக்க வரும்போது, அதே குலக்கல்வியை புதிய கல்விக் கொள்கை என்றும், விஸ்வகர்மா திட்டம் என்றும் மாறுவேடத்தில் மீண்டும் புகுத்த நினைக்கிறது ஆரியக் கூட்டம். இந்த சூழ்ச்சிகளை முறியடித்து நம் கல்வி உரிமைகளை அரணாகக் காத்து நிற்கிறார் திராவிட மாடல் முதல்வர்” என்று கல்வி உரிமைகளுக்காக கழக அரசு ஆற்றி வரும் பணிகளை மாணவர்களிடையே எடுத்துரைத்தார்.

வருகை தந்த மாணவர்களுக்கு நிகழ்ச்சியின் நிறைவில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான ‘திராவிட மாடல் அரசு’, ‘இடம் பொருள் கலைஞர்’ ஆகிய நூல்கள் வழங்கப்பட்டன.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர் வி.தினேஷ் குமார், ப. பாலசந்தர், சேப்பாக்கம் பகுதி அமைப்பாளர் ஜி. ஜெ. கிரிதரன், பகுதி துணை அமைப்பாளர்கள் கே. தனுஷ், ஆர்.விக்னேஷ் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.